உள்ளாட்சி மன்றங்களுடைய உரிமைகள் அதிகமாக ஆக்கப் படுகின்றன என்ற பெயரால், மாநில உரிமைகளைப் பறிப்பது சிறப்புடையது அல்ல, ஏற்புடையது அல்ல என்பதை நான் மீண்டும் ஒரு முறை தமிழக அரசின் சார்பாக எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of Order என்ன என்று சொல்லுங்கள்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூற நீங்கள் அனுமதி அளிப்பீர்கள் என்று நினைக்கிறேன். மத்திய அரசிற்கு எதிராக இந்தக் கருத்துக்கள் கூறப்பட்டிருக்கும் போது. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, உட்காருங்கள் (குறுக்கீடு) அடுத்து, நேற்று . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தயவுசெய்து மன்னிக்க வேண்டும். மத்திய அரசிற்கு எதிராக எந்தக் கருத்தும் சொல்லப்படவில்லை. மாநில அரசிற்குச் சார்பாக சொல்லப்பட்ட கருத்துக்கள்தான். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கருத்துக் கூறுகிற நேரம் அல்ல. (குறுக்கீடு) திரு. சொக்கர் உட்கார வேண்டும். இது எல்லாம் தேவைப்படும்போது, நேற்று ஊராட்சி மன்றம் பற்றி வந்தது. நீங்கள் வெளியூர் போய்விட்டீர்கள். பேசு வதற்கு வாய்ப்பு இருந்திருக்காது. (குறுக்கீடு) நேற்றெல்லாம் நிறையப் பேசி கருத்து எல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. திரு. சொக்கர் உட்காரலாம். அடுத்து, திருமதி பாப்பா உமாநாத். (குறுக்கீடு) திரு. சொக்கர் பேசுகிற பேச்சு எதுவும் பதிவாகாது.

(உ) சென்னை நகரில் தர்ணா, உண்ணாவிரதம் நடத்துவதற்கு இருக்கும் தடை குறித்து.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தில் இங்கு பதில் சொல்லக்கூடிய நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை எழுப்பப்பட்டது. நம்முடைய நகரத்தில், குறிப்பாக, சென்னை நகரத்தில் தங்களுடைய கருத்துக்களை, ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தக்கூடிய முறையில் தர்ணாவோ, உண்ணாவிரதமோ, ஆர்ப்பாட்டமோ

செய்வதற்கு தற்போது அனுமதி வழங்கப்படுவது இல்லை. பாரதி சிலையை நோக்கி ஊர்வலமாக அனுப்பப்படுகிறார்கள். ஆகவே, அந்தந்த நிறுவனங்களின் வாயில்களில் மற்றும் குறிப்பாக சில இடங்களில் பழைய முறையில் அந்த உரிமைகளை வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதிக்க வேண்டும் என்று அவருடைய கவனத்தை ஈர்ப்பதற்காகவே இந்தப் பிரச்சினையை எழுப்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர்கள் எழுப்பிய அந்தக் கோரிக்கை என் கவனத்திலே இருக்கிறது. நிச்சயமாக சென்னை மாநகரப் போலீஸ் அதிகாரிகளோடு கலந்து பேசி ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

தீவன இயந்திரங்கள் இறக்குமதி செய்ய முன்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று அவையில் நம்முடைய மத்திய பாராளுமன்றத் தலைவர் திரு. பல்ராம் ஜாக்கர் அவர்கள் சபாநாயகர் என்ற முறையில் அல்லாமல் ஒரு நிறுவனத்தின் கௌரவத் தலைவர் என்ற முறையில் தமிழக அரசோடு தொடர்பு கொண்ட ஒரு விஷயம் குறித்து பல செய்திகள் விவாதிக்கப்பட்டன. அது தொடர்பாக நம்முடைய முதல்வர் அவர்கள் கோப்புகளைப் பார்த்து விடை சொல்வதாகச் சொல்லியிருந்தார். தற்போது முதலமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளிப்பார்கள்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் கூறியவாறு நேற்று அப்துல் லத்தீப் அவர்களும், பூவராகன் அவர்களும் எழுப்பிய இந்தப் பிரச்சினை குறித்து நான் விளக்கம் அளித்தபோது, இன்னும் நான் அந்தக் கோப்புகளைப் பார்க்கவில்லை, பார்த்துவிட்டு இன்று அது குறித்து அறிக்கை வைப்பதாகச் சொன்னேன். அதன்படி அந்த அறிக்கையினை இப்போது இந்த அவையின் முன்னால் வைக்கிறேன்.

அறிக்கை.

திரு. பல்ராம் ஜாக்கர் அவர்களிடமிருந்து அவரது லெட்டர் பேடில் எழுதப்பட்ட கடிதம் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுக்கு 23-3-1987 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதனையொட்டி ஃபோமிடா பசும்புல்